# திருமுருகாற்றுப்படை கூறும் முருகனின் ஆறுமுகங்கள்

*முனைவர் ம. வனத்தையன்*
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை
தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர்
https://doi.org/10.5281/zenodo.15323759

## முன்னுரை

*தமிழர்கள் வாழ்ந்து வந்த இடங்களை ஐந்து பிரிவுகளாகப் பிரித்தார்கள். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாளை என்பனவாகும். மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி என்ற வழங்கப்பட்டது. குறிஞ்சி என்ற பகுதி மலைப் பகுதியாக இருந்ததினால் அங்கிருந்த மலை வாழ் மக்கள் முருகனையே போற்றி வணங்கினார்கள். சங்க இலக்கியத்தில் முருக பெருமானை சேயோன் அல்லது கொற்றவை செல்வன் என்றே குறிப்பிட்டு உள்ளார்கள். முருகன் என்னும் தமிழ்க்கடவுள் இந்தியாவில் மட்டுமல்ல உலகிலுள்ள மக்கள் பலராலும் போற்றி வழிகடும் கடவுளாக விளங்கிகிறார். அம்முருகனின் ஆறுமுகங்களின் சிறப்பை விளக்குவதாகவே இக்கட்டுரை அமைகிறது.*

## முருகு விளக்கம்

*முருகன் என்றால் இளமையானவர், மணம் மிக்கவர், தெய்வீக அழகுடையவர் என்று பொருள். குமரன் என்றாலும் இளமையானவர் என்றே பொருள். அழகு என்பது இதயத்தை சுத்தப்படுத்துகிறது. அழகையும் இளமையையும் குறிக்கும் விதத்தில் அவரை முருகன், அழகன், குமரன் போன்ற பெயர்களில் அழைக்கின்றார்கள்.*

## ஆறுமுகம்

*பக்தர்களின் ஆசையைப் பூர்த்தி செய்ய ஒரு முகம், பக்தர்களின் அறியாமையை ஒழித்து அறிவை நிலை நிறுத்த ஒரு முகம், பக்தர்களின் ஆழ்மனதில் புதைந்துள்ள எண்ணங்களை வெளிக்கொண்டுவர ஒரு முகம், யாக யக்யங்களைச் செய்ய துணை புரிய ஒரு முகம், நல்லவர்களைக் காத்து தீயவர்களைத் தண்டிக்க ஒரு முகம், மற்றம் பக்தர்களிடம் அன்பு என்ற சுடரை ஏற்றி இன்பத்தை நிலைநிறுத்த ஒரு முகம் என ஆறுமுகங்களும் தனித்தனியாக முக்கியத்துவம் பெற்றள்ளன.*

## ஆசையைத் துறந்தவர்

*நாரத முனி ஒரு மாம்பழத்தை கைலாசத்திற்கு கொண்டு போய் கொடுத்து கணேசன் மற்றும் முருகனுக்கு இடையே மனக்கசப்பை ஏற்படுத்தினார். முருகன் அதில் ஏற்பட்ட போட்டியில் தோல்வியடைந்ததினால் தன்னிடம் இருந்த அனைத்து செல்வம் மற்றும் அரசைத் துறந்துவிட்டு ஆவினன்குடி அல்லது பழனியை அடைந்தார். அங்கு அவரை முற்றிலும் துறந்தவர் என்று அழைக்கின்றார்கள். அங்கு மிகச் சிறிய உடையை மட்டுமே அணிந்து கொண்டு ருத்ராட்சா மற்றும் ஒரு தண்டத்தை ஏந்திக் கொண்டு நிற்கின்றார் (திருப்புகழ் 117) அவரே விவேகப் பழமான ஞானபண்டிதர். தலைக்கனம் மற்றும் செருக்கு தோல்வியையே தரும் என்றும் அடக்கம் முன்யோசனை மட்டுமே வெற்றியை கொடுக்கும் என்பதை வெளிப்படுத்தவே இந்த சம்பவதம் நடந்துள்ளது. ஒவ்வொருவரும் கோபத்தை துறக்க வேண்டும். சாதாரன ஒரு மாம்பழத்திற்காக முருகன் பெரிய நாடகமாடிவிட்டதாக இது தோற்றத்தை தந்தாலும் பின்னர் அவர் தண்டாயுதபாணி கோலத்தை மேற்கொண்டதன் மூலம் அதிக*

ஆசையும் அவசர காரியங்களும் முடிவாக அனைத்தையும் துறக்க வைக்கும் மன நிலையில் கொண்டு சென்றுவிடும் என்பதை உணர்த்துகிறது.

**ஒளிதரும் முகம்**

ஆறு திருமுகங்களைப் போற்றப் புகுந்த நக்கீரர் முதலில் உலகில் இருளைப் போக்கும் திமுகத்தைப் பற்றிச் சொல்கிறார். பெரிய இருள் படர்ந்த உலகம் இருளின்றிக் குற்றம் இன்றி விளங்கும்படியாகப் பல வகையான கதிர்களை விரிக்கின்றது ஒரு முகம். இதனை,

***மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்***
***பல்கதிர் விரிந்தன்ற ஒருமுகம்***
***(திருமுருகாற்றுப்படை, பாடல் வரிகள் - 91,92)***

என்ற பாடலால் அறியலாம். உலகம் புற இருளை உடையது. உலகத்திலுள்ள மக்கள் அக இருளாகிய அறியாமையை உடையவர்கள். அந்த அறியாமை என்னும் அக இருளை அகற்றி உள் ஒளி தருபவர் முருகபெருமான் என்பதை ஒளிதரும் முகம் வழி அறியலாம்.

**ஆர்வலர்க்கு அருளும் முகம்**

முதல் முகம் உலகத்துக்கே பொதுவான நலத்தைச் செய்கிறது. இரண்டாவது முகமோ சிறப்பான ஒரு செயலைச் செய்கிறது. அம்முகம் அன்பர்களுக்கு அருளைக் கொடுக்கிறது.

இறைவன் திருவருளைப் பெறவேண்டும் என்ற ஆர்வம் உடையவர்கள் ஆர்வலர். ஆவர்களே அடியவர்கள். அவர்கள் முருகப்பெருமானை போற்றிப் புகழ்கின்றார்கள். அவர்கள் இறைவனைத் தவிர வேறுயாரையும் போற்றிப் புகழாதவர்கள். இளங்குழந்தை தாயிடம் எல்லாவற்றையும் கேட்டுப் பெறுவது வழக்கம். அதுபோல பக்தர்களும் தமக்குத் தேவையானவற்றை இறைவனிடமே சொல்லி பெற்றுக் கொள்வார்கள். ஒருமுகம் பக்தர்கள் போற்றிப் புகழ அவர்களுக்கு ஏற்கும்படியாகப் பொருந்தி இனிதாகச் சென்று விருப்பத்தோடு மகிழ்ந்து வரத்தைக் கொடுத்தது. இதனை,

***ஆர்வலர் ஏத்த அமர்ந்துஇனிது ஒழுகிக்***
***காதலின் உவந்து வரம்கொடுத் தன்றே***
***(திருமுருகாற்றுப்படை, பாடல் வரிகள் - 93,94 )***

என்ற பாடலின் வழி அறியமுடிகிறது.

கொடுப்பதனால் வரும் இன்பத்தை அறிந்தவர்கள் இரவலரை எதிர்பார்த்து நிற்பார்கள். அதனை அறியாதவர்களே தம் பொருளை பிறருக்குக் கொடுக்க அஞ்சுவார்கள். இதனை,

***ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை***
***வைத்திழக்கும் வன்கணவர் (குறள் 228)***

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். இறைவன் கொடுக்கும் இன்பத்தை உணர்ந்தவன். ஆதலின் பக்தர்களுக்கு வரம் கொடுக்க வேண்டும் என்ற விருப்போடு இருக்கிறான். இவ்வாறு பக்தர்கள் முருகனைப் புகழ அவர்களின் மனம் மகிழும்படி வரம் அளிக்கும் செயலைச் செய்கிறது முருகனுடைய இரண்டாவது முகம்.

அடியார்களுக்கு வேண்டியதை வேண்டியபோதெல்லாம் கொடுக்கும் கருணை உள்ளம் கொண்டவன் முருகபெருமான். இதனை,

***வேண்டிய போதடியார் வேண்டிய போகமது***
***வேண்ட வெறாதுதவு பெருமானே***
***(திருப்பகழ், பாடல் 247)***

என்ற அருணகிரியாரின் பாடலடிகளால் அறியலாம்.

சங்க இலக்கிய நூலான பரிபாடலிலும் பக்தர்களை ஆர்வலர் என்றே கூறும். இதற்கு பின்வரும் பாடல் வரி சான்றாக உள்ளது.

***ஆர்வலர் தொழுதேத்தி நின்புகழ் விரித்தனர்***
***(பரிபாடல், திருமால் வாழ்த்து, பாடல் 4)***

**வேள்வியைக் காக்கும் முகம்**

வானமும் வையமும் வாழவேண்டும் என்ற திருவுளம் உடையவன் முருகபெருமான். தேவர்களுக்கு வரும் இடையூறுகளைப் போக்கி அவர்கள் வாழ வழி செய்கிறவன். அந்தணர்கள் வேதமந்திர விதியின்படி வழுவாமல்ணீ செய்கின்ற வெள்விகளை எந்த இடையூறும் இன்றி நிறைவேற்றத் திருவுளம் கொண்டு அவர்களுக்கு அருள் செய்யும் முகம் மூன்றாவது திருமுகம் ஆகும். இதனை,

*மந்திர விதியின் மரபுளி வழாஅ*
*அந்தணர் வேள்விஓர்க் கும்மே*
*(திருமுருகாற்றுப்படை, பாடல் வரிகள் -95,96)*

என்ற பாடல் அடிகள் புலப்படுத்துகிறது.

தேவர்கள் வேள்வி நடத்தும்போது அவ்வேள்விக்கு இடையூறு செய்ய அசுரர்கள் முயல்வார்கள். அப்போது தேவர்கள் யாகம் செய்ய துணையாக முருகபெருமான் இருப்பார். இதனை,

*அந்தண்மறை வேள்வி காவற்கார*
*( திருப்பகழ் பாடல் 43)*

என்ற அருணகிரிநாதரின் திருப்புகழ்பாடல் வாயிலாகவும் அறியமுடிகிறது. தேவர்களுக்குத் துணையாக முருகப்பெருமான் இருந்துள்ளார் என்பதை அருணகிரிநாதரும் எடுத்துக் கூறியுள்ளார்.

வேதமும் வேள்வியும் போற்றப் பெறுபவை இறைவனுடைய சொரூபமாகவே எண்ணத்தக்கவை என்று மாணிக்கவாசகர் கூறியுள்ளார். இதனை

*வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு*
*(திருவாசகம் பாடல் 214)*

என்ற பாடல் வெளிப்படுத்துகிறது.

## மெய்ஞானத் திருமுகம்

நூல்களால் அறிய முடியாத சில பொருள்களை ஆசிரியர் விளக்குவார். ஓர் ஆசிரியர் தம்மால் விளக்க முடியாது என்று சொன்ன எஞ்சிய பொருளை சிறந்த அறிவுள்ள ஆசிரியர் விளக்குவார். ஆனால் எல்லா ஆசிரியர்களுக்கும் மேலான ஒப்பற்ற ஆசிரியர் இருந்தால் அவன் மற்றவர்களால் விளக்கமாக எடுத்துச் சொல்ல முடியாத பொருள்களை விளக்குவான். அவ்வாறு உள்ளவன் முருகபெருமான்.

முருகன் தனக்குமேல் குருவின்றி தான் யாருக்கும் மாணாக்கனாகாமல் பெரிய குருவாக, குமரகுருபரனாக விளங்குபவன். தீராத ஐயங்களையும் தீர்த்து வைப்பவன். இவ்வாறு தெளிவில்லாமல் உள்ள பொருள்களை விளக்கும்செயலை அவனுடைய திருமுகங்களில் ஒன்றான மெய்ஞானத் திருமுகம் செய்கிறது. இதனை,

*எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்*
*திங்கள் போலத் திசைவிளக் கும்மே*
*(திருமுருகாற்றுப்படை, பாடல் வரிகள் - 97,98)*

என்ற பாடல் உணர்த்துகிறது.

## வீரத் திருமுகம்

பகைவர்களைஅடியோடுஅழித்து இல்லை என்று ஆக்கும் பெரிய வலிமை படைத்தவன் முருகன். தேவர்களைப் பாதுகாக்க கங்கணம் கட்டிக்கொண்டவன் ஆதலின் அசுரர்களால் அவர்களுக்கு எந்த இடையூறு வந்தாலும் அதைப் போக்குகிறவன்.

களவேள்வி செய்து வெற்றியை நிலைநிறுத்திக் கொள்வதும் கொற்றவையைப் போற்றுவதும் பேய்களுக்கு விருந்தளிப்பதும் போரின் முடிவில் நிகழ்பவை. முருகன் இந்த மரபு தவறாமல் நடக்கிறான். செறுநர்களை வெற்றிகொண்டு சினம் மிக்க உள்ளத்தோடு வெற்றி பெற்றுப் பிறகு களவேள்வியைச் செய்கிறான். இவ்வாறு செய்யும் செயலில் ஈடுபட்டிருந்தது ஒரு முகம். இதனை,

*செறுநர்த்; தேய்த்துச் செல்சமம் முருக்கிக்*
*கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே*
*(திருமுருகாற்றுப்படை, பாடல் வரிகள் - 99,100)*

என்ற பாடலில் கூறியுள்ளார்.

## மகிழும் முகம்

ஒளி தரு முகமம், அன்பர்களுக்கு அருளும் முகமும், வேள்வி காக்கும் முகமும், ஞானம் உணர்த்தும் முகமும், வீரம் விளைவிக்கும் முகமுமாக ஐந்து முகங்களின் சிறப்பகளை எடுத்துக் கூறிய நக்கீரர் ஆறாவதாக மகிழும் முகம் பற்றிக் கூறியுள்ளார். உலகமெல்லாம் இன்ப வாழ்வு பெறுவதற்காக வள்ளிநாயகியோடு மகிழ்ந்து விளங்குகிறத ஆறாவது முகம் அதுவே மகிழும் முகம் என்கிறார். இதனை.

*குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்*
*முடவரல் வள்ளியொட நகையமர்ந் தன்றே*
*(திருமுருகாற்றுப்படை, பாடல் வரிகள் - 102,103)*

என்ற திருமுருகாற்றப்படை பாடல் வரிகளின் வழி அறிகிறோம்.

ஆறுமுகங்களின் சிறப்புகளையும் அருணகிரிநாதர் தாம் இயற்றிய திருப்புகழின் ஒரு பாடல் வழி எடுத்துக் கூறியுள்ளார். இதனை,

**ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே**
**ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே**
**கூறும் அடி யார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றேகுன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம்**
**ஒன்றெ மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே**
**வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே**
**ஆறுமுகம் ஆனபொருள் நீயருளல் வேண்டும்**
**ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமானே**

**(திருப்பகழ் பாடல் 1328)**

என்ற பாடலின்வழி அறியமுடிகிறது.

## முடிவுரை

மேற்கண்டவற்றினின்று முருகப் பெருமானின் ஆறுமுகங்களும் ஆறு நிலைகளைக் குறிக்கிறது. வாழ்க்கையில் செய்ய வேண்டியதையும் செய்யக் கூடாததையும் மக்களுக்குக் காட்ட பல்வேறு வடிவங்களை எடுக்கிறார். திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ள முருகனின் ஆறுமுகங்களின் சிறப்பகளை இக்கட்டுரைவிளக்கமாகஎடுத்தியம்பியுள்ளது.

## துணைநூற்பட்டியல்


1. திருமுருகாற்றுப்படை விளக்கம், கி.வா. ஜகந்நாதன், அமுத நிலையம் லிமிடெட், சென்னை, மறுபதிப்பு 1993.
2. திருக்குறள், தெளிவான உரை, உரையாசிரியர் புலவர் செந்துறைமுத்து, கங்கை புத்தகநிலையம், சென்னை, இருபத்து ஒன்பதாம் பதிப்பு, அகஸ்ட் 2016.
3. மாணிக்கவாசகவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம் மூலமும் உரையும், புலவர். வி. சிவஞானம், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர், இரண்டாம் பதிப்பு செப்டம்பர் 2013.
4. திருப்புகழ் மெய்ப்பொருள் தெளிவுரை, பதிப்பாசிரியர் புலவர். த. கோவிந்தன், சங்கர் பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு திசம்பர் 2000.